புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# தமிழ் இலக்கியங்களும் பண்பாடு மாற்றங்களும்

முனைவர் அ.குருமூர்த்தி
உதவிப்பேராசிரியர் மற்றும் தலைவர்
ஸ்ரீ வாசவி கல்லூரி(சுயநிதிப்பிரிவு)
ஈரோடு – 638316

## முன்னுரை

ஒரு நாட்டின் பண்பாட்டினை அந்நாட்டு இலக்கியம் வெளிப்படுத்தும் என்பர். தமிழ் இலக்கிய சூழலில் இருந்து மிகத் தொன்மையான இலக்கியமாக் கிடைக்கும் சங்க இலக்கியம் முதல் உரைநடை காலமான தற்காலம் வரை, மக்களின் வாழ்க்கையையும் அவர்களின் வாழ்க்கை நிலையில் மாறி வந்த நிகழ்வுகளையும் படைத்துக் காட்டுகின்றன. ஒவ்வொரு காலத்தில் நிகழ்ந்த படையெடுப்பு வாணிகத் தொடர்பு அரசியல தொடர்புகள் ஆகியவற்றால் புதிய, புதிய பண்பாடுகள, பழக்க வழக்கங்கள் தமிழ்நாட்டில் புகுந்திருப்பதைக் காணமுடிகிறது. இதனை வரலாற்றுக் குறிப்புகளும் உறுதி செய்கின்றன. இத்தகைய புதிய பண்பாடுகள் உள்ளே நுழையும் போது, பழைய பண்பாட்டினை ஏற்றுக் கொண்டு, அதனை இறுகப் பற்றி இருப்பவர்கள் அல்லது ஊறிப்போனாவர்கள். அவற்றில் இருந்து மீள முடியாமல் இருப்பதைக் காணலாம். இதற்கு மாறாக, இருக்கக் கூடியவர்கள். எத்தகைய பண்பாடு வந்தாலும் அதனை அப்படியே ஏற்றுக் கொண்டு/தகவமைத்துக் கொண்டு வாழப் பழகிக் கொள்கின்றனர். உலக வழக்கினை ஏற்றுக் கொண்டவர்களாகத் திகழ்கிறார்கள். மாற்றம் ஒன்றே மாறாதது என்ற மெய்ம்மையை உணர்ந்தவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய சிந்தனை உடையவர்கள் மட்டுமே, இவ்வுலகத்தை அடுத்த தளத்திற்கு நகர்த்திச் செல்கின்றனர்.

தமிழக சூழலில் பண்பாட்டினை மாற்றம் செய்வதில், தொடக்க கால மன்னாராட்சிகளே காரணமாக அமைந்தன. அரசன் எவ்வழியே மக்கள் அவ்வழி என்பர். அதுபோல, மன்னரின் மொழி, உணவு, சமயம், கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, அவனின் வழியில் நடந்துக்கொண்டார்கள். இதனை அடிப்படையைக் கொண்டே தமிழ் இலக்கியங்களும் அதனின் ஊடாக ஏற்பட்ட பண்பாடு மாற்றங்களைப் பற்றியே இக்கட்டுரை அமையவுள்ளது.

## பண்பாடு

தமிழ்நாட்டில் மேடைகள, நாள், வார, மாத இதழ்களில் முழங்கக் கூடிய சொல் பண்பாடு, இச்சொல்லினை பழங்கால இலக்கியங்களில் காண்பதரிது, ஆனால், பெரும்பாலும் உரைநடை நூல்களில் காணமுடிகிறது. பண்பாடு என்னும் சொல்லானது பண்படுத்துதல் என்னும் சொல்லிருந்து பிறந்தது. இலக்கண நோக்கில் பார்த்தால் முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்பர். செம்மைப்படுத்துதல் என்பது இச்சொல்லுக்குப் பொருளாக அமையும்.

பண்பு என்னும் சொல்லுக்குப் பிறர் இயல்பை அறிந்து நடக்கும் நற்குணம் என்பது பொருள். “பண்பெனப்படுவது பாடறிந் தொழுகல்” என்னும் கலித்தொகை அடிகளின் பொருளில் இருந்து அறிந்துக் கொள்ளலாம். திருவள்ளுவரும் பண்புடைமை என்ற ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் அறிஞரும் கவிஞரும் திறனாய்வாளருமான மாத்யூ ஆர்னால்டு என்பவர் வெளியிட்ட “பண்பாடு குழப்பமும்” என்ற அரிய நூலில் குறிப்பிட்ட கருத்தை தழுவிய “கல்ச்சர்” என்னும் சொல்லைத் தமிழும் ஆங்கிலமும் ஒருங்கே நன்கு கற்ற அறிஞர்கள் மொழி பெயர்த்துக் தமிழ் மொழியில் புகுத்தி உள்ளனர். ஆதி காலத்து மக்கள் செய்து கொண்ட கருவிகள், மேற்கொண்டிருந்த பழக்க வழக்கங்கள், கொண்டு இருந்த

கொள்கைகள் முதலியவற்றை வெளிப்படுத்தும் அறிவு நிலையை மானிட வரலாற்று நூல்கள் "கல்ச்சர்" என்று கூறும். இது நாகரிகத்தில் அடங்கி விடும். நாகரிகமோ பண்பாட்டில் அடங்க முடியாது. பண்பாடு என்பது நாகரிகத்தின் ஒரு பகுதியாகும்.

சங்க காலம்

சங்க காலம் என்பதோர் சில இலக்கியச் சான்றுகளையும் வரலாற்றுச் சான்றுகளையும் கொண்டே, தற்காலத்தில் விளங்கிக் கொள்ள முடியும். அந்தக் காலச் சூழலை மக்களின் அகவாழ்வு, புறவாழ்வு என இரண்டாகப் பிரித்து வாழ்ந்த்தாக காணமுடியும்.

அக நூல்களில கிடைக்கும் செய்திகளில் மக்களின் பண்பாடு எத்தகையது எனவும், மன்னர்கள், வள்ளல்கள், இயற்கை வர்ணனை, வரலாற்றுக் குறிப்புகள், திருமணம், இல்வாழ்க்கை என பலவகைப்பட்ட செய்திகள் விரவிக் கிடைக்கின்றன. பிரிந்த தலைவன், தலைவியைக் காண வேண்டும் என்ற ஆவலில் தேரை மிக விரைவாக செலுத்துகிறான்.

"ஈரம் பட்ட செவ்விப் பைம்புனத்து
ஓரேர் உழவன் போலப் " (குறுந்தொகை – 131)

அவனது விரைவு/வேகம் எதனுடன் ஒத்து இருக்கிறது என்றால், ஓரோ உழவனைப் போல, ஏனெனில், ஓர் ஏர் வைத்து இருக்கும் உழவன். நிலத்தின் ஈரப்பதம் காயும் முன், உழுது விதைக்க வேண்டும் அல்ல, அதுபோல, தேரினை செலுத்துவதாக இப்பாடல் அமைகிறது. கணவன் – மனைவி இடையே நடத்தப்படும் இல்வாழ்க்கை, வாழ்வியல் முறை, இருவருக்கும் இடையே உள்ள காதல்/அன்பு இப்பாடல் மூலமாக காணமுடிகிறது.

தமிழ் மண்ணினை ஆட்சிப்புரிந்து வந்த மன்னர்களின் வீரம், கொடை தன்மைகளை புறம் பொருள் பேசக்கூடிய நூல்களில் மிகத் தெளிவாக காணலாம். அதோடு, இலக்கியப் படைப்பாளர்கள், உலகளாவிய சிந்தனையுடன் வாழ்ந்து விளங்கி உள்ளனர் நாம் அறிந்துக் கொள்ள முடிகிறது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர் தர வாரா" – புறம்- 192

என்று கணியன் பூங்குன்றனாரும்,

"நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்" – புறம் – 195

என்று நரிவெரூஉத்தலையாரும், புறநானூறு நூலில் உலகளாவிய சிந்தனை வியப்புக்குரியது.

சங்க மருவிய காலம்

சங்க இலக்கிய காலம் பொற்காலம் என இலக்கிய வரலாறு எழுதிய அறிஞர்கள் குறிப்பிடுவர். ஆனால், சங்கம் மருவிய காலமான களப்பிரர்கள் காலத்தை " இருண்ட காலம்" என்று உரைப்பர். ஏனெனில், தமிழகத்தில் முதலவதாக, பிற மொழி பேசக் கூடியவர்கள் இங்கு ஆட்சி அதிகாரத்திற்கு வருகின்றனர். இவர்களின் ஆட்சிமுறையினை சிம்மவிஷ்ணுவின் காசக்குடிச் செப்பேடுகளும், நெடுஞ்சடையின் கேள்விக் குடி செப்பேடுகளும் நமக்கு உணர்த்துகின்றன.

அரசியல் மாற்றங்களினால் இயற்கை சார்ந்த வாழ்வில் இருந்து மாற்றங்கள் நிகழ்ந்த போது சங்க இலக்கியத் தொடர்ச்சியில் இடைவெளி நிகழ்ந்தது. குறிப்பாக, களப்பிரர் வருகை மக்களின் இன்ப வாழ்வில் குறிக்கிட்ட பொழுது, ஒழுக்க நெறிகளில் மாற்றங்கள் நேர்ந்தன. கி.பி.100 முதல் கி.பி.500 வரை நீண்ட இந்த காலத்தில் எழுந்த இலக்கியங்கள் நீதி நெறிகளை வலியுறுத்தி எழுந்தவை எனலாம். இந்த காலமே பதினெண் கீழ்க்கணக்கு காலமாக அல்லது அறநெறிக் காலமாக அறியப்படுகிறது.

"மாசுபடினும் மனிதன்சீர் குன்றாதாம்
பூசிக் கொளினும் இரும்பின்கண் மாசொட்டும் " (நான்மணிக்கடிகை-100)

அழுக்கு சேர்ந்தாலும் மனிதன் பெருமையில் குறையாது, கழுவினாலும் இரும்பில் கரை பிடிக்கும், அன்புடன் புத்திமதி கூறினாலும் மனிதனின் கீழ்மைக் குணம் தெரிந்து விடும் என்று மக்களுக்கு அறிவுறுத்துகின்றன.

குடியியல் என்ற தலைப்பில் அமைந்துள்ள குறள் வெண்பாக்கள் பழம் நம்பிக்கைகளை அடியொற்றி அமைந்தவை எனலாம். அவ்வகையில் தமிழ்ச் சமூகத்தோடு தொடர்புடைய சிந்தனைத் தெறிப்புகள் என்று அவற்றைக் குறிப்பிடலாம்.

''அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்'' (குறள்-954)

கோடி தொகுத்தாலும் பெருமைக் குறைவான செயல்களை நற்குடி மாந்தர் செய்ய மாட்டார் என்கிறார் வள்ளுவர்.

சமண. பௌத்த மதங்களை அடியொற்றியே களப்பிரர்களின் ஆட்சி அமைந்தது. சமண, பௌத்த கொள்கைகளையும் அதோடு நன்னெறிகளை போதிக்கவும், அவர்கள் படைத்த இலக்கியங்களில் புகுத்தினர்.

காப்பிய காலம்

கி.பி.2-ஆம் நூற்றாண்டு தொடர்ந்து, நீண்ட கதைகளின் ஊடாக சமண, பௌத்த சமயத்தவர்கள் தங்கள் கொள்கைகளை பரப்பினர். இதற்கு சான்றாக, சிலப்பதிகாரம். மணிமேகலை என்ற இரண்டு பெரிய காப்பியங்களைக் காணலாம். ஏனெனில், கதை வணிகர்கள் குடும்பத்தை ஒட்டியே கதை அமைகிறது. அரசர்களிடம் பெற்ற பொருள், குறைவாகவும், அதோடு களப்பிராகளின் ஆட்சி முடிவினாலும், பொருள் படைத்த வணிகர்களைச் சார்ந்து வாழ வேண்டிய சூழல் ஏற்படவே, அவர்களையே முதன்மைக் கதாபாத்திரமாகக் கொண்டு தொடர்கதைகள் எழுதப்ப்பட்டன.

இரட்டை காப்பியங்கள் என்று கூறப்படும் சிலப்பதிகாரம், மணிமேகலை தொடர்ச்சியான கதையமைப்பை உடையதாக அமைந்துள்ளது. மணிமேகலை முழுக்க பௌத்த கொள்கைகளை பறைச்சாற்றியே எழுதப்பட்டுள்ளது.

பக்தி காலம்

பல்லவர்கள் காலம் தொடங்கி, சோழர்கள் காலம் முடிய சமயநிலை பற்றி ஏராளமான விவரங்கள் கிடைக்கின்றன. இந்தக் காலகட்டத்தில் பெரும் சமயங்களின் வளர்ச்சியும் போராட்டமும் அதிகம் இடம் பெற்றன. அதே சமயத்தில் மக்கள் நம்பிக்கை சார்ந்த நாட்டார் வணக்க முறைகளும் அதிகம் இடம் பெற்றன. பெரும் சமயங்கள் சமணம் (சைனம்) பௌத்தம், சைவம், வைணவம் என்ற நான்காகச் செயல்பட்டன.

பல்லவன மன்னர்களில் மகேந்திரவர்மன் சமண சமயத்தை ஆதரித்து வந்தான். பின்னர், சைவ மதத்திற்கு மாறுகிறான். இக்காலக் கட்டத்தில் வாழ்ந்தவர் திருநாவுக்கரசர்.

''குனிந்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்நீறும்''

(தேவாரம் – 4ஆம் திருமுறை – கோயில் (சிதம்பரம் ) பதிகம்

என்று கடவுள் மீது மிகுந்த அன்புக் கொண்டு, பாடல்களை எழுதினர். தனித்த மனிதர்கள் மீது எழுதப்பட்ட இலக்கியம், இக்காலக் கட்டத்தில் கடவுள் மீது மாற்றம் கொள்கிறது. அதோடு, சைவம், வைணவம் அடியார்கள் பெரும் பகுதி கடவுளையே முதன்மைப் படுத்தி அனைத்து இலக்கியங்களும் எழுதினர். இதற்கு காரணம், முன்னர் இருந்த சமண, பௌத்த பிக்குகள் தான்.

புராணக் காலம்

பக்தி இலக்கியக் கால கட்டத்தினை தொடர்ந்து, புராண, இதிகாசங்கள் உருவாகத் தொடங்கியது. சிறு. சிறு பாடலாக எழுதப்பட்ட அறஇலக்கியக் காலத்திற்கு பின்னர், காப்பிய இலக்கியங்கள் உருவாக்கப்பட்டதோ, அதோ போல, பக்தி இலக்கிய காலக்கட்டத்திற்கு பிறகு, நீண்ட கதை மரபு கூறும் முறை உருவானது. அதனை புராண – இதிகாசங்கள் என்றனர்.

இராமாயணம், மகாபாரதம், பெரியபுராணம் என்ற பட்டியல நீளுகின்றன. இக்காலகட்டத்தில் சைவம், வைணவம் ஆதிக்கச செலுத்திக் கொண்டு இருந்தன. சமண, பௌத்த இலக்கியங்கள் இக்காலக்கட்டத்தில் மிகுதியாக தோன்றவில்லை. அதோடு, புராண கதைகளில் வரும் கதையின் முதன்மைப் பாத்திரங்கள் அதீத சக்தி உடையவர்களாக படைக்கப்பட்டனர். மேலும், அவர்கள் மக்களின் உதாரண மனிதர்களாக படைக்கப்பட்டனர்.

சிற்றிலக்கியக் காலம்

''விருந்தே தானும்

புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" (சொல். செய்.231)

என்ற நூற்பாவிற்கு ஏற்ப, புதிய, புதிய இலக்கிய வகைகள் தமிழ் மண்ணில் பூத்துக் குலுங்கின. சிற்றிலக்கியங்களின் காலத்தைக் குறிப்பிட்ட வரையறைக்குள் அடக்கி விட இயலாது. கி.பி.5-ஆம் நூற்றாண்டு தொடங்கி இன்று வரை பெரிதும் சிறிதுமாக இயங்கிக் கொண்டே இருக்கின்றன. இவ்வியலக்கியங்கள் எழுந்த போது அவற்றை வரையறுத்து ஒழுங்கு படுத்தப்பட்ட பாட்டியல் நூல்கள் எனும் இலக்கண நூல்கள பல எழுந்தன.

பேரரசுகளின் வீழ்ச்சிக்கு பிறகு, சிற்றரசுகள், உருவானர்கள், அதோடு, பெரும் பொருள்கள் கொடுத்து உதவக்கூடியவர்கள் எவரும் இல்லாமல் போனதால், படைப்பாளிகள் குறைய ஆரம்பித்தனர். முழுமையான கதையமைப்புடன் எவரும் படைப்புகளைப் படைக்கவில்லை. இருப்பினும், கலம்பகம், அந்தாதி, உலா, பிள்ளைத்தமிழ், கோவை, பரணி என்ற வடிவ முறைகள் பல தோன்றியது.

*தற்காலம்*

சிற்றிலக்கிய கால கட்டத்திற்கு பிறகு, பல இலக்கிய வகைகள், தோன்றிய பின்னரும், பிரித்தானியர்கள் வருகைக்கு பின்னர், தமிழ் இலக்கியத்தில் மாபெரும் திருப்புமுனையாக அமைந்தன. உரைநடை அமைப்பு உருவாக்கப்பட்டது. புதினம், சிறுகதை, கவிதை என புதிய முறை உருவாக்கப்பட்டன. நீண்ட கதை அமைப்பினை / வடிவத்தினை புதினமும், சிறுகதைகளைக் கொண்ட அமைப்பினை சிறுகதைகளாகவும், தான் எண்ணிய கருத்துக்களை வெளிப்படுத்த கவிதைகளையும் வெளிக் கொண்டு வந்தான். அதோடு இல்லாமல் ஹைக்கூ, லிமெரிக், சென்ட்ரீயூ, போன்ற கவிதை வடிவங்களும் உருவான.

இவ்வடிமைப்புகளை இரண்டாக பிரிக்கலாம். ஒன்று, சுதந்திரத்திற்கு முன்பு, சுதந்திரத்திற்கு பின்பு. ஏனெனில், சுதந்திரத்திற்கு முன்பு வந்த இலக்கியங்கள் நாட்டின் விடுதலையை நோக்கிய கருத்துக்களாகவே அமைந்தன. பாரதியார் போன்ற கவிஞர்களை நாம் மேற்கோளாக எடுத்துக்கொள்ளாலம். சுதந்திரத்திற்கு பிறகு உண்டான இலக்கியங்கள், சமூக விடுதலையை நோக்கியே உருவானது. மொழி, சமூகம் இரண்டையும் வளர்க்க பாடுபட்டன. அதோடு, தமிழ்நாட்டில் தோன்றிய திராவிட இயக்கங்கள் மூடநம்பிக்கைகள், தீண்டாமை, சாதி ஒழிப்பு, பெண்ணியம், தலித்தியம் போன்ற கருத்துக்களை கையில் எடுத்தது. இயக்க கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட படைப்பாளிகள் தான் பெற்ற அறிவின் பின்புலத்தில் தங்களின் இலக்கியங்களைப் படைத்தனர். அதோடு காட்சி ஊடகத்திலும் அவர்களின் பங்கீடு இருந்தன.

*நிறைவாக*

இரண்டாயிரக் கால இலக்கிய வரலாற்றில தமிழ் மொழி மட்டுமே நிலைத்து நிற்கிறது. கிரேக்கம், இலத்தீன் மொழிகளை தற்காலத்தில் பேசக் கூடியவர்கள், பழைய மொழி வடிவத்தைப் படிக்க முடியாது. ஆனால், இரண்டாயிரம் காலம் முன்னர் இருந்த திருக்குறளை தற்போதும் படிக்க முடியும். எத்தகைய மொழி சீர்மை. அதோடு, பல காலங்களாக மொழி கலப்பு, ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்த போதும், புதிய வடிவங்களை தமிழ் இலக்கியங்கள் தன்னுள் வாங்கி கொண்டு தன்னுடைய வழியில் அது செம்மைப்படுத்தி நீடித்து நிற்கிறது.

*Keywords*

தமிழ் இலக்கியம், பண்பாடு, சங்க காலம்

*துணை நின்ற நூல்கள்*

1. குறுந்தொகை – நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை
2. புறநானூறு - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை
3. நான்மணிக்கடிகை – கௌரா பதிப்பகம், சென்னை
4. திருக்குறள் – கௌரா பதிப்பகம், சென்னை
5. திருநாவுக்கரசர் தேவாரம் – விஜயா பதிப்பகம், கோவை
6. தொல்காப்பியம் – மெய்யப்பன் பதிப்பகம்

********* ********* ********** ********* ********* ********** ********** **********